**MCOP. 134/2024**

**நாள்.18.11.2025**

**ம.சா.2 – வினோத்**

**<u>1, 2ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். நான் விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் நிதி நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த கோபிநாத் எனக்கு எப்படி பழக்கம் என்றால் அவர் கால்டாக்சி வைத்திருந்தார், அதனால் பழக்கம். எனக்கும் கோபிநாத்துக்கும் பழக்கம் இருந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த சாலை நான்குவழிசாலை என்றால் சரிதான். மதுரை – இராமேஸ்வரம் செல்வதற்கு தனிச்சாலையும், இராமேஸ்வரம் – மதுரை செல்வதற்கு தனிச்சாலையும் உள்ளது என்றால் சரிதான். இறந்துபோன கோபிநாத் மதுரை – இராமேஸ்வரம் நோக்கி செல்லும் சாலையில் வந்தபோதுதான் விபத்து நடந்தது என்றால் சரிதான். மேற்படி கோபிநாத் மீது மோதியதாக சொல்லப்படும் 1ம் எதிர்மனுதார் வாகனம் இராமேஸ்வரம் ரோட்டிலிருந்து மதுரை நோக்கி சென்றது என்றால் சரிதான். கோபிநாத் ஓட்டி சென்ற வாகனம் தவறான வழித்தடத்தில் சென்று சரியான வழித்தடத்தில் வந்து கொண்டிருந்த 1ம் எதிர்மனுதார் வாகனத்தில் மோதிவிட்டது என்றால் நான் அவர் வந்த திசைக்கு எதிர் திசையில் நின்று கொண்டிருந்தேன், அவர் என்னை பார்த்து திரும்பி வரும்போதுதான் விபத்து நடந்தது. விபத்து நடந்த இடத்தில் சென்டர் மீடியன் உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் திரும்பினால் செட்ர் மீடியனில் கோபிநாத் இடித்துக்கொள்வார் என்றும், அவ்வாறு என்னை நோக்கி அவர் திரும்பி வரவில்லை என்றால் சரியல்ல, அந்த இடத்தில் சாலையை கடக்கும் வகையில் வழி இருந்தது. விபத்திற்கு கோபிநாத்தின் கவனக்குறைவும், தவறான வழித்தடத்தில் வந்ததுதான் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதார் வாகனம் சரியான திசையில் ஓட்டி வரப்பட்டதால் அந்த வாகனத்தை ஓட்டி வந்தவர் மீது எந்த தவறும் இல்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் எந்த வகையிலும் பொறுப்பல்ல என்றால் சரியல்ல.

**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தின் கார் ஓட்டுநர்தான் காரணம் என்றால் சரிதான். விபத்திற்கு இறந்த நபரின் கவனக்குறைவு காரணமல்ல என்றால் சரிதான்.

**நீதிமன்ற கேள்வி:–**

எந்த இடத்தில் விபத்து ஏற்பட்டது என்றால் மானாமதுரைக்கு அடுத்து சங்கமங்களம் என்ற ஊரில் உள்ள விலக்கு அருகே நடந்தது. நான் பார்த்திபனூருக்கு பலமுறை வந்துள்ளேன். நான் B.A., B.Ed., படித்துள்ளேன். எனக்கு திசை தெரியும். விபத்து நடந்த இடத்தில் ரோடு தென்வடலாக உள்ளது. கோபிநாத் வடக்கிலிருந்து தெற்கு நோககியும், கோபிநாத் மீது மோதியதாக சொல்லப்படும் கார் தெற்கிலிருநது வடக்கு நோக்கி வந்தது என்றால் சரிதான். தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த கார் ரோட்டின் கிழக்கு பக்க டிராக்கில் வந்தது. கோபிநாத் கார் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து மேற்கி நோக்கி திரும்பும்போதுதான் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த கார் மோதிவிட்டது. காரை மேற்கு நோககி திரும்பும்போது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வரும் வாகனங்களை கவனிக்க முடியும் என்றால் சரிதான். தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து மேற்கு நோக்கி திரும்பும் நபர்தான் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வரும் வாகனத்தையும், அதே டிராக்கில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வாகனம் வந்தால் அதை கவனித்து செல்லவேண்டும் என்றால் சரிதான். ரோட்டின் ஒரு பகுதியிலிருந்து ரோட்டின் மற்றொரு பகுதிக்கு செல்லக்கூடிய நபர்தான் நிறுத்தி, நிதானித்து, வாகனத்தை கவனித்து ரோட்டை கடக்க வேண்டும் என்றால் சரிதான்.

**5, 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.